2020 ஜனவரி 7]

இதைப்போன்று, ஊரகப் பகுதிகளில், எளிதில் அணுக இயலாத பகுதிகளில், bus *போக்குவரத்து இல்லாத பகுதிகளில் நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை என்னிடத்தில் கொடுக்கும்பட்சத்தில் அதுகுறித்து நிச்சயமாக, உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

துணை மின் நிலையம்

***47289—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, இலுப்பநத்தம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்க வேண்டுமென்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) கனவை இன்றையதினம் நனவாக்கி இருக்கின்ற மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அதற்கு உறுதுணையாக இருக்கின்ற மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள இலுப்பநத்தம் ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இப்போது அதற்கான அரசாணை பெறப்பட்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று தமிழக மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து மறைந்து வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

வீரத்தின் விளை நிலமாம், சேலம் மாவட்ட மண்ணுக்குச் சொந்தக்காரர், குடிமராமத்து மன்னர், காவேரி மீட்பு நாயகர், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக பொங்கல் தொகுப்புடன் ரூ.1,000/- கொடுக்க உத்தரவிட்ட கொடை வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) சேலத்து சிங்கம், கொங்கு நாடு தந்த தங்கம், எங்கள் குடும்ப தெய்வமாக, குல தெய்வமாக வணங்கும் அம்மாவின் வழியில் நல்லாட்சி நடத்திவரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்துவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிய கண்டமே வியக்கும் வகையிலும், கால்நடைத் துறைக்கு வலுசேர்க்கும் வகையிலும், சேலம் மாவட்டம் எனது கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைவாசலில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் கால்நடை அறிவியல் ஆராய்ச்சிக்கான மேம்பட்ட ஒருங்கிணைந்த கல்வி நிறுவனம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு விரைவில் அடிக்கல் நாட்ட உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பாகவும், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைய உறுதுணையாக இருந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும்

2020 ஜனவரி 7]

கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளிமயமாக்கி, தடையில்லா மின்சாரம் வழங்கியதோடு மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) மின்மிகை மாநிலமாக உயர்த்திக் காட்டியவர் நமது இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் ஐயா எடப்பாடியார் அவர்களும் தொடர்ந்து சாதனை செய்துவருகிறார். எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இலுப்பநத்தம் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். சில நேரங்களில், இயற்கை இடர்பாடுகளால், உயர் மின்னழுத்தம் ஏற்படும்போது மின்சாரம் தடைபடுகிறது. அந்த இடர்பாடுகளைத் தவிர்க்கும்பொருட்டு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு இருக்கக்கூடிய நேர்மை நகரில் 33/11 கே.வி. துணை மின் நிலையப் பணி பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு கடந்த 13–10–2018 அன்று துவக்கிவைக்கப்பட்டது. 22–11–2019–க்குள் பணி முடிக்கப்பட வேண்டுமென்று கால நிர்ணயம் செய்யப்பட்டு, ஒப்பந்தம் போடப்பட்டு, பணி தொடங்கப்பட்டது. ஆனால், இதுவரையில் அந்தப் பணி நிறைவு செய்யப்படவில்லை. மேலும் காலதாமதமாகும் என்ற சூழ்நிலையில்தான் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பணியை விரைந்து முடித்து, பத்துக்கும் மேற்பட்ட நகர்களில் வசிக்கின்ற மக்களுக்கு சீரான, தடையில்லா மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில் 230 கே.வி., 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2009 ஆம் ஆண்டில் முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டன. நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அந்தக் கேள்வியை இந்த அவையில் மூன்று முறை கேட்டேன். அப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விரைந்து முடிக்கப்படும் என்று உறுதிமொழி அளித்தார்கள். ஆனால், தற்போது நிலத்திற்குண்டான தொகை செலுத்தப்பட்டு, சுவரும் எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே, விரைவாக ஒப்புதல் பெற்று, இந்தப் பணியை விரைந்து முடித்து, சுற்றியிருக்கக்கூடிய 40–க்கும் மேற்பட்ட நகர்களில் வசிக்கின்ற மக்கள் பயன்பெறும் வகையில் தடையில்லாத, சீரான மின்சாரம் கிடைக்கும் நிலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட நேர்மை நகர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. Transformer–ம் வந்துவிட்டது, Code of conduct இருந்த காரணத்தால், breaker வருவதற்கு ஒரு மாதம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது Code of Conduct முடிந்துவிட்ட காரணத்தினால் 10 நாட்களுக்குள் வந்துவிடும். அதிகபட்சம் ஒரு மாத காலத்திற்குள் பணி முடிக்கப்பட்டுவிடும்.

கணேஷ் நகரைப் பொறுத்தவரையில், 2009 ஆம் ஆண்டிலிருந்தே பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. அதிக தொகை கேட்ட காரணத்தினால் இப்பொழுது பேச்சுவார்த்தை நடந்து முடிந்து, அந்த இடத்திற்குண்டான தொகையைக் கட்டி, தற்பொழுதுதான் நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறோம். அதற்கு tender விடுவதற்கான பணி மேற்கொள்ளப்பட வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே, கூடியவிரைவில் அந்தப் பணியும் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் UG cable போடுவது குறித்து ஒவ்வொரு முறையும் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட 65 கிலோ மீட்டர் அளவிற்கு போடப்பட்டிருக்கிறது. இன்னும் 190 கிலோ மீட்டர் அளவுக்கு போடவேண்டியதிருக்கிறது. அந்தப் பணியும் அதிகபட்சமாக ஆறு

2020 ஜனவரி 7]

மாத காலத்திற்குள் முடிந்துவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.T. *கலைச்செல்வன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***18997—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், மணக்கொல்லை கீழ்க்காலனி பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சிறந்த நிருவாகத்திற்கான ஆளுமை விருதைப் பெற்றுத் தந்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசை சிறப்பாக வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், மணக்கொல்லை ஊராட்சி கீழ்க்காலனியில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்